குழந்தைக்கு அறுவை சிகிச்சையா?



வெளியீடு
அண்ணாமலை பல்கலைக்கழகம்

தொகுப்பாசிரியர்
டாக்டர். வெ.இரவீந்திரன்

குழந்தைக்கு அறுவை சிகிச்சையா?

தொகுப்பாசிரியர்

டாக்டர். **வெ.இரவீந்திரன்** M.S. M.Ch.,
இணைபேராசிரியர்
குழந்தை அறுவை சிகிச்சை பிரிவு
இராஜா முத்தையா மருத்துவ கல்லூரி
அண்ணாமலை பல்கலைக்கழகம்

இந்திய குழந்தை அறுவை சிகிச்சை மருத்துவர்களின் இரண்டாவது மாநில மாநாட்டின் போது பொது நலம் கருதி வெளியிடுவோர்

அண்ணாமலை பல்கலைக்கழகம்
சிதம்பரம் மிட்-டவுன் ரோட்டரி சங்கம்
மணிபாரதி அச்சகம்
வெளியிடும் நாள் 12.07.2003

முன்னுரை

மருத்துவத் துறை கடலை விட ஆழமானது. எந்த ஒரு மருத்துவரும் தன் வாழ்-நாட்களுக்குள் எல்லா மருத்துவ நுட்பங்களையும் அறிந்து கொள்வது என்பது இயலாத காரியமாகும். 19-ம் நூற்றாண்டுக்குப் பிறகு ஏற்பட்ட அறிவியல் பெருவளர்ச்சி (Scientific Knowledge Explosion) இதை மேலும் கடினமாக்கியது. எனவேதான் ஒவ்வொரு மருத்துவரும் தங்களுக்கென்று ஒரு உடல் பகுதியை தேர்ந்து எடுத்து அந்த பகுதி தொடர்பான நோய்-சிகிச்சை முறைகளில் சிறப்பு மருத்துவ பயிற்சி பெறத் தொடங்கினார்கள். உதாரணமாக கண் மருத்துவம் (OPHTHOLMOLOGY), இதய மருத்துவம் (CARDIOLOGY), நரம்பு மருத்துவம் (NEUROLOGY) போன்ற உட்பிரிவுகள் மருத்துவத் துறையில் தோன்றின.

இவ்வாறு உடல் பகுதிகளின் அடிப்படையில் சிறப்பு மருத்துவ பயிற்சி பெற்றது குழந்தைகள், முதியோர் ஆகியோரின் நோய்களுக்குப் பொருந்தவில்லை. ஏனெனில் இந்த இரு பருவங்களில் ஏற்படும் நோய்கள் ஒன்றுக்கு மேற்பட்ட உடல் உறுப்புகளை ஒரே சமயத்தில் பாதிப்பன ஆகும். மேலும் குழந்தைகளின் உடல் இயக்கம் (Body Physiology), மருந்துகளின் வீரியம் தாங்கும் தன்மை (Tolerance to drugs) ஆகியவை பெரியவர்களைக் காட்டிலும் முற்றிலும் வேறுப்பட்டவை. எனவே குழந்தைகளின் நோய்களை குணப்படுத்த தனி சிறப்பு மருத்துவ பயிற்சி தேவைப்பட்டது. இவ்வாறு குழந்தை மருத்துவத்தில் பயிற்சி பெற்றோர் Paediatrician எனவும், குழந்தை அறுவை சிகிச்சையில் பயிற்சி பெற்றோர் Paediatric Surgeon எனவும் அழைக்கப்படுகிறார்கள்.

குழந்தை அறுவை சிகிச்சை துறை 1960களிலேயே இந்தியாவில் தொடங்கப்பட்டுவிட்டது. எனினும் இத்துறை குறித்த சரியான செய்திகள் பலருக்கும் தெரியாமலேயே உள்ளது. இந்த புத்தகத்தில் குழந்தைகளுக்கு அறுவை சிகிச்சை செய்வது தொடர்பாக பொது மக்களின் மனதில் எழும் சந்தேகங்களுக்கு விடையளித்துள்ளோம். இப்பதிப்பு பெற்றோரின் மனத்தில் உள்ள தேவையற்ற பயத்தை போக்கி குழந்தைகளின் நலவாழ்விற்கு வழிவகுக்கும் என நம்புகிறோம்.

இந்நூலைப் பதிப்பிக்க தார்மீக ஆதரவும், அரவணைப்பும் தந்த அண்ணாமலை பல்கலைக்கழக இணைவேந்தர் மாண்பமை டாக்டர் **M.A.M.இராமசாமி** அவர்களுக்கு இந்நூலை காணிக்கை ஆக்குகிறேன். இந்நூலை எழுதப் பணித்த பல்கலைக்கழக துணைவேந்தர் மாண்பமை டாக்டர் **L.B.வெங்கட்ரங்கன்** அவர்களுக்கும், பதிவாளர் டாக்டர் **M.இரத்தினசபாபதி** அவர்களுக்கும் என் நன்றி உரித்தாகுக. ஊக்கமும் ஆலோசனையும் வழங்கிய என் துறைத்தலைவர் டாக்டர் **P.V.ஹயவதனராவ்** அவர்களுக்கும் துணைவேந்தரின் ஆலோசகர் டாக்டர் **வேம்பார்** அவர்களுக்கும் நான் செய்யக்கூடிய கைமாறுதான் என்ன? நூல் வெளியிட நிதி உதவி வழங்கிய சிதம்பரம் மிட்-டவுன் ரோட்டரி சங்கத் தலைவர் **Rtn. S.சஞ்சீவி** அவர்களுக்கும், நிதி உதவி வழங்கிய நல்லுள்ளம் படைத்த வணிகர்களுக்கும், நண்பர்களுக்கும் நன்றிகள் பல. நேர்த்தியாக அச்சிட்ட மணிபாரதி அச்சகத்தாருக்கு எங்கள் பாராட்டுகள்.

டாக்டர் **வெ.இரவிந்திரன்,** M.S. MCh

1. குழந்தை அறுவை சிகிச்சை துறை என்றால் என்ன?

நம்மில் பலர் "குழந்தைகள்" என்றால் ஏதோ ஒன்றிரண்டு வயது வரைதான் என்று எண்ணுகிறோம். இது தவறாகும். உடல் உறுப்புகளின் இயக்கத்தை அடிப்படையாகக் கொண்டு மனித வாழ்க்கையை மூன்று பெரும் பிரிவுகளாக வகுக்கலாம்.

குழந்தைப் பருவம் : இது உடல் உறுப்புகளின் வளர்ச்சி காலமாகும். கரு உருவானது முதல் 19 வயது விடலைப் பருவம் வரை இதனுள் அடங்கும்.

இளமைப் பருவம் : 20வது வயதில் உறுப்புகளின் வளர்ச்சி நின்று விடுகிறது. 20 வயதிற்குப் பிறகு இளமைப் பருவமாகும். இதை இரண்டாக பிரிக்கலாம். 20 முதல் 40 வரை செவ்விளமைப் பருவம் என்றும் 40 முதல் 60 வரை பேரிளமைப் பருவம் என்றும் வழங்கப்படுகிறது. இப்பருவங்களில் எந்தவித கடின உழைப்பையும் தாங்கும் வலிமை பெற்றவையாக உடல் உறுப்புகள் உள்ளன.

முதுமைப் பருவம் ; 60 வயதிற்குப் பிறகு வரும் இப்பருவத்தில் உடல் உறுப்புகள் மெள்ள மெள்ள தேய்ந்து சிறுகச் சிறுக செயல் இழக்கத் தொடங்குகின்றன.

தாயின் வயிற்றில் கருவாக உள்ள குழந்தைகள், பிறந்த பச்சிளங்குழந்தைகள், பள்ளி செல்லும் குழந்தைகள், விடலைப் பருவ குழந்தைகள் ஆகியோருக்கு ஏற்படும் நோய்களை அறுவை சிகிச்சை மூலம் குணப்படுத்தும் துறையே குழந்தை அறுவை சிகிச்சை (Pediatric Surgery) துறையாகும். இத்துறையில் சிறப்பு மருத்துவ பயிற்சி பெற்றோர் குழந்தை அறுவை சிகிச்சை மருத்துவர் (Pediatric Surgeon) என அழைக்கப்படுகிறார்கள்.

2. குழந்தைகளுக்கு ஆப்பரேசன் (அறுவை சிகிச்சை) செய்யலாமா?

குழந்தைகளுக்கு வரும் நோய்களில் சிலவற்றை மருந்துகள் மூலம் குணப்படுத்தலாம். ஆனால் மற்ற சில நோய்களுக்கு ஆப்பரேசன் செய்தே ஆக வேண்டும். அத்தகைய நோய்களுக்கு எவ்வளவு சிறந்த மருந்துகள் கொடுத்தாலும் அறுவை சிகிச்சை செய்யாமல் அவை குணமாகா! ஆப்பரேசன் இன்றி மருந்துகளால் இந்த நோய்களை குணப்படுத்தமுடியும் என்று கூறுபவர் போலி மருத்துவர். ஆப்பரேசன் பற்றி பெற்றோருக்கு இருக்கும் பயத்தை பயன்படுத்தி இப்போலிகள் பணம் பறிப்பார்கள்.

குழந்தைகளுக்கு செய்யும் ஆப்பரேசன்களை மூன்று வகையாக பிரிக்கலாம்.

உயிர் காக்கும் உடனடி ஆப்பரேசன் (Emergency Operation)

இந்த ஆப்பரேசனை மருத்துவர் சொல்லும் கால கெடுவுக்குள் செய்யாவிட்டால் உடல் உறுப்புகள் நிரந்தரமாக பாதிக்கப்படுவதோடு உயிருக்கும் ஆபத்து நேரிடலாம்.

விரைவில் செயத்தகு ஆப்பரேசன் (Semi Emergency Operation)

இந்த ஆப்பரேசனை எவ்வளவு சீக்கிரம் செய்ய முடியுமோ அவ்வளவு சீக்கிரம் செய்வது நலம். மிகுந்த கால தாமதம் செய்தால் நோய் முற்றி வேறு பல உபாதைகள் ஏற்பட்டு விடும்.

காலம் கருதி செய்யும் ஆப்பரேசன் (Elective Operation)

சில குறிப்பிட்ட நோய்களுக்கு தகுந்த காலம் வாய்க்கும் வரை காத்திருந்து பிறகு ஆப்பரேசன் செய்ய வேண்டும். உதாரணமாக பிறவிலேயே உதடு பிளந்து பிறக்கும் குழந்தைகளுக்கு 3 அல்லது 4 மாதங்கள் கழிந்த பிறகே ஆப்பரேசன் செய்ய வேண்டும். எவ்வளவு நாள் வரை பொறுத்து பின் ஆப்பரேசன் செய்யலாம் என்பதை உங்கள் குழந்தை அறுவை சிகிச்சை சிறப்பு மருத்துவரிடம் (Pediatric Surgeon) கேட்டு அறிந்து கொள்ளலாம்.

3. ஆப்பரேசன் செய்வதால் குழந்தைக்கு வலிக்குமா?

சின்ன ஊசி குத்தினாலே குழந்தை வலியால் துடித்து அழுகிறதே! அவ்வாறு இருக்கும் போது பெரிய ஆப்பரேசன் செய்வதால் குழந்தைக்கு எவ்வளவு வலிக்குமோ என்ற பயம் எல்லா பெற்றோருக்கும் இருக்கும். குழந்தைகளின் மேல் உள்ள அதீத பாசத்தால் சிலர் மிகையாக பயப்படுகிறார்கள். இந்த பயம் தேவையற்றது.

நவீன மருத்துவம் மிகவும் வளர்ச்சி அடைந்துள்ளது. எத்தகைய கடுமையான வலியையும் போக்கக்கூடிய சக்தி வாய்ந்த மருந்துகள் உள்ளன. ஊசி குத்தும் வலி கூட தெரியாமல் இருக்க மருந்துகள் இருக்கின்றன. குழந்தைகளுக்கு ஆப்பரேசன் செய்யும் போது மயக்க மருந்து கொடுக்கப்படுகிறது. எனவே கத்தியால் கீறுவதோ, தையல் போடுவதோ குழந்தைக்கு சற்றும் தெரியாது. ஆப்பரேசனின் போது குழந்தை ஏதோ இரவில் தூங்குவது போல நிம்மதியாக உறங்கிக் கொண்டிருக்கும். ஆப்பரேசன் முடிந்த உடன் மயக்கம் தெளிவதற்கு முன்பாகவே சக்தி வாய்ந்த வலி நிவாரணிகள் குழந்தைக்குத் தரப்படுகின்றன. எனவே ஆப்பரேசனால் குழந்தைக்கு வலி ஏற்படாது. மூன்று அல்லது நான்கு நாட்களுக்குப் பிறகு வலி நிவாரணிகளும் தேவைப்படாது.

ஆப்பரேசன் செய்த மறுநாள் குழந்தை எழுந்து உட்காரும்; மூன்றாம் நாள் நடக்கத் தொடங்கும்; நான்காம் நாள் சிரிக்கத் தொடங்கும்; ஐந்தாம் நாள் ஓடி விளையாடத் தொடங்கும்; ஒரு வாரத்திற்கு பிறகு பழைய படியே துறுதுறு என குறும்பு கொப்பளிக்க "வால்" தனங்கள் செய்யத் தொடங்கி விடும் - பிறகென்ன கவலை!

4. குழந்தைகளுக்கு ஆப்பரேசன் செய்ய யாரை அணுகலாம்?

குழந்தைகளுக்கு ஆப்பரேசன் செய்வதில் சிறப்பு பயிற்சி பெற்ற மருத்துவர்களை குழந்தை அறுவை சிகிச்சை சிறப்பு மருத்துவர்கள் என அழைக்கிறார்கள். குழந்தைகளுக்கு ஆப்பரேசன் செய்ய இவர்களே ஏற்றவர்கள். நம்மில் பலர் ஏதோ ஒரு சர்ஜனிடம் குழந்தைக்கு ஆப்பரேசன் செய்து கொள்ளலாம் என எண்ணுகின்றனர். இது மிகவும் தவறு. ஏனெனில்:-

அ. குழந்தைகளுக்கு ஏற்படும் நோய்கள் (குறிப்பாக பிறவி ஊனம்) ஒன்றுக்கு மேற்பட்ட உடல் உறுப்புகளை ஒரு சேர பாதிக்கின்றன. ஒரு குறிப்பிட்ட உறுப்பு நோயில் நிபுணத்துவம் பெற்ற மருத்துவரால் பிற உறுப்புகளில் ஏற்படும் நோய்களை அறிந்து தகுந்த சிகிச்சை தர இயலாது. உதாரணமாக சிறுநீரக நிபுணருக்கு மூளையில் ஏற்படும் நோய்களைப் பற்றிய பயிற்சி இருக்காது; மூளை நிபுணருக்கு குடலில் ஏற்படும் நோய்கள் பற்றிய பயிற்சி இருக்காது. ஆனால் குழந்தை அறுவை சிகிச்சை நிபுணர் குழந்தைகளுக்கு தலை முதல் கால் வரை ஏற்படும் அனைத்து நோய்களையும் அறிந்திருப்பதால் அவரால் முழுமையான சிகிச்சையை தர முடிகிறது.

ஆ. பெரியவர்களின் சதைகள் இறுகி பலமானதாக காணப்படுகிறது. எனவே ஆப்பரேசனின் போது தையல் போடுவது எளிதாகும். ஆனால் குழந்தைகளின் சதைகள் மிகவும் நுண்ணியதாக உள்ளன. இத்தகைய நுண்ணிய உறுப்புகளின் ஆப்பரேசன் செய்ய தனி திறமை தேவைப்படுகிறது. இதற்கான சிறப்பு பயிற்சி பெற்றவர்கள் குழந்தை அறுவை சிகிச்சை மருத்துவர் ஆவர்.

இ. குழந்தைகள் பெரியவர்களின் குறுவடிவம் அல்ல (Children are not miniature adults) என்று ஒரு மருத்துவப் பழமொழி உள்ளது. குழந்தைகளின் உடல் இயக்கம் பெரியவர்களிடம் இருந்து மிகவும் வேறுப்பட்டுள்ளது. குறிப்பிட்ட ஆப்பரேசனைத் தாங்கும் சக்தி, மருந்தின் வீரியத்தை தாங்கும் சக்தி ஆகியவை குழந்தைகளுக்கு மிகவும் மாறுபாடாக உள்ளன. எனவே பெரியவர்களுக்கு கொடுக்கும் மருந்தையோ அல்லது செய்யும் ஆப்பரேசனையே அளவில் குறைத்து குழந்தைகளுக்கு செய்யலாம் என எண்ணுவது தவறாகும். குழந்தைகளின் உடலியல் தேவைகளை குழந்தை அறுவை சிகிச்சை நிபுணரே நன்கு அறிவார்.

எனவே குழந்தைகளுக்கு ஆப்பரேசன் செய்ய வேண்டியிருந்தால் குழந்தை அறுவை சிகிச்சை நிபுணரை அணுகுவதே சரியானதாகும்.

5. குழந்தை அறுவை சிகிச்சை நிபுணர்களை எப்படி அடையாளம் காண்பது? அவர்களின் கல்வி அல்லது பயிற்சி தகுதி என்ன?

தங்கள் பகுதியில் குழந்தை அறுவை சிகிச்சை சிறப்பு மருத்துவர் யார் இருக்கிறார்கள் என்ற விவரத்தை தங்கள் குடும்ப மருத்துவரிடம் இருந்து பெறலாம். இவர்கள் M.S., M.Ch., என்ற இரு பட்டங்களைப் பெற்றவர்களாக இருப்பார்கள். M.S. என்றால் Master of Surgery அதாவது பொது அறுவை சிகிச்சை மருத்துவர் என்று பொருள் M.Ch என்றால் Magister of Chirurgie அதாவது உயர் சிறப்பு அறுவை சிகிச்சை நிபுணர் என்று பொருள்.

M.B.B.S. பட்டம் பெற 5½ ஆண்டுகள் பயிற்சி பெறவேண்டும். மேலும் 3 ஆண்டுகள் பயிற்சி பெற்ற பிறகே M.S. பட்டம் வழங்கப்படுகிறது. அதற்கு பிறகு 3 ஆண்டுகள் குழந்தை அறுவை சிகிச்சையில் பயிற்சி பெற்ற பிறகே M.Ch. பட்டம் வழங்கப்படுகிறது. ஆக பன்னிரண்டு வருட கடின பயிற்சிக்குப் பிறகே ஒருவர் குழந்தை அறுவை சிகிச்சை சிறப்பு மருத்துவர் என்ற தகுதியை அடைகிறார்.

பலர். M.Ch. என்பது DCH போன்ற பட்டம் என்று எண்ணுகின்றனர். DCH என்பது Diploma in Child Health ஆகும். M.B.B.S. பட்டம் பெற்ற பிறகு இரண்டு வருட பயிற்சிக்குப் பிறகு DCH பட்டம் வழங்கப்படுகிறது. DCH பட்டம் பெற்ற மருத்துவர்கள் குழந்தைகளுக்கு ஏற்படும் நோய்களில் சிலவற்றை மருந்துகளால் குணப்படுத்த பயிற்சி பெற்றவர் ஆவார். இவர்கள் ஆப்பரேசன் செய்ய பயிற்சி பெறுவதில்லை.

குழந்தைகளுக்கு ஆப்பரேசன் செய்வதற்கு முன்னால் மருத்துவரின் பயிற்சித் தகுதி பற்றி அவரிடமே கேட்டுத் தெளிவு பெறலாம்

(குறிப்பு M.Ch. என்ற பட்டம் வேறுபல உயர்சிறப்பு நிபுணர்களுக்கும் அளிக்கப்படுகிறது. அவர்களில் குழந்தை அறுவை சிகிச்சை நிபுணர்களும் அடங்குவர்)

6. குழந்தை மருத்துவ நிபுணருக்கும் (Pediatrician) குழந்தை அறுவை சிகிச்சை நிபுணருக்கும் (Pediatric Surgeons) என்ன வேறுபாடு?

குழந்தைகளுக்கு ஏற்படும் நோய்களை இரண்டு வகையாகப் பிரிக்கலாம்.

✎ மருந்து, மாத்திரைகளால் குணப்படுத்தக் கூடிய நோய்கள்

வயிற்றுப் போக்கு, சளி, சத்து குறைவு போன்ற நோய்களை ஆப்பரேசன் இன்றி மருந்துகள் கொடுத்தே குணப்படுத்தலாம். இத்தகைய நோய்களுக்கு சிகிச்சை தர பயின்றவர்களையே குழந்தை மருத்துவ நிபுணர் (Pediatrician) என அழைக்கிறார்கள். இவர்கள் DCH அல்லது MD என்ற பட்டம் பெற்றவர்களாக இருப்பார்கள். M.B.B.S. பட்டம் பெற்ற பின் இரண்டு வருட பயிற்சிக்கு பிறகு DCH (அதாவது Diploma in Child Health) என்ற பட்டம் கொடுக்கப்படுகிறது. M.B.B.S.க்குப் பிறகு 3 வருட பயிற்சி பெற்றால் MD (அதாவது Doctor of Medicine) என்ற பட்டம் தரப்படுகிறது. இவர்கள் ஆப்பரேசன் செய்ய பயிற்சி பெறுவது இல்லை.

✎ ஆப்பரேசன் மூலம் குணப்படுத்தக் கூடிய நோய்கள்

குழந்தைகளுக்கு ஏற்படும் கட்டிகள், புண்கள், சிலவகையான வாந்தி மற்றும் மலச்சிக்கல் ஆகிய நோய்களுக்கு ஆப்பரேசன் தேவைப்படலாம். இத்தகைய ஆப்பரேசன்களை செய்யப் பயிற்சி பெற்றவர்களே குழந்தை அறுவை சிகிச்சை நிபுணர்கள் (Pediatric Surgeon) என அழைக்கப்படுகிறார்கள். இவர்கள் M.S., M.Ch. என்ற இரு பட்டங்களைப் பெற்றிருப்பார்கள். இது பற்றி விரிவாக முன்பே விளக்கியுள்ளோம்.

7. குழந்தைகளுக்கு ஆப்பரேசன் செய்வதில் உயிருக்கு ஆபத்து உண்டா?

நவீன மருத்துவத்தில் எத்தகைய சிக்கலான ஆப்பரேசன்களையும் பாதுகாப்பாக செய்ய முடியும். ஆனாலும் நோயின் தன்மை, குழந்தையின் வயது ஆகியவற்றை பொறுத்து உயிருக்கு ஆபத்து வர வாய்ப்பு உள்ளது. ஆப்பரேசனின் போது ஏற்படும் ஆபத்தை கணக்கில் கொண்டு குழந்தைகளை மூன்று வகையாகப் பிரிக்கலாம்.

பத்தில் ஒன்று (High Risk) இந்த பிரிவில் உள்ள குழந்தைகள் பத்து பேருக்கு ஆப்பரேசன் செய்தால் விதி வசத்தால் ஒரு குழந்தை உயிரிழக்க நேரிடலாம். மீதம் உள்ள ஒன்பது குழந்தைகள் பூரண குணம் அடைந்து விடும். பிறந்து சில மணி நேரங்களே ஆன பச்சிளங் குழந்தைகள், உயிர்க் கொல்லி நோயுள்ள குழந்தைகள், புற்றுநோய் உள்ள குழந்தைகள் ஆகியோர் இந்த பிரிவில் அடங்குவர்.

நூற்றில் ஒன்று (Medium Risk) இந்த பிரிவில் உள்ள குழந்தைகள் 100 பேருக்கு ஆப்பரேசன் செய்தால் ஒரு குழந்தைக்கு ஆபத்து ஏற்படலாம். குடலில் அடைப்பு உள்ள குழந்தைகள், குடல்வால் வீங்கிய (Appendicitis) குழந்தைகள், 2 வயதுக்கு உட்பட்ட குழந்தைகள் ஆகியோர் இதில் அடங்குவர்.

ஆயிரத்தில் ஒன்று (Low Risk) இதில் 1000-ல் ஒருவருக்கே ஆபத்து நேரிடலாம். சிறு ஆப்பரேசன் தேவைப்படும் குழந்தைகள், 2 வயதுக்கு மேற்பட்ட குழந்தைகள் ஆகியோர் இதில் அடங்குவர்.

குறிப்பிட்ட ஒரு குழந்தைக்கு ஏற்பட்டிருக்கும் நோயின் தன்மை, குழந்தையின் வயது ஆகியவற்றை கணக்கில் கொண்டு எவ்வளவு ஆபத்து இருக்கும் என்பதை குழந்தை அறுவை சிகிச்சை சிறப்பு மருத்துவரிடம் கேட்டுக் தெரிந்து கொள்ளலாம்.

8. ஆப்பரேசன் செய்வதால் ஆபத்து இருக்கும் போது அதை செய்யத்தான் வேண்டுமா?

ஒரு பேச்சுக்கு நாம் சாலையில் நடந்து செல்வதாக வைத்துக் கொள்வோம். அப்போது எதிரில் வரும் பேருந்து அல்லது லாரி நம் மீது மோதி நாம் உயிர் இழக்கும் வாய்ப்பு உள்ளது. ஆனால் இதற்கு பயந்து கொண்டு யாரும் சாலையில் நடக்காமல் இருப்பதில்லையே! அதே போலத்தான் ஆப்பரேசனும்! அதில் ஆபத்து இருந்தாலும், அதனால் ஏற்படக்கூடிய பலன்களை மனதில் கொண்டு ஆப்பரேசன் செய்து கொள்வதே புத்திசாலித்தனமாகும்.

9. குழந்தைகளுக்கு ஆப்பரேசன் செய்வதால் பிற்காலத்தில் பாதிப்பு ஏற்படுமா?

ஆப்பரேசன் என்பதே குழந்தையை முற்றிலும் குணப்படுத்த வேண்டும் என்பதற்காகத்தான் செய்யப்படுகிறது. பெரும்பாலான குழந்தைகள் ஆப்பரேசனுக்குப் பிறகு பூரண குணம் அடைந்து மகிழ்ச்சியாக இருப்பார்கள். ஆனால் சில சமயங்களில் விதி வசத்தாலும் நோயின் வீரியத்தாலும் ஒரு சில பாதிப்புகள் ஏற்பட வாய்ப்பு உள்ளது. இத்தகைய பாதிப்புகள் பெரும்பாலும் தற்காலிகமானவை. இவை ஓரிரு மாதங்களிலோ ஓரிரு வருடங்களிலோ சரியாகிவிடும். உதாரணமாக ஆப்பரேசன் செய்த காயத்தில் சீழ் பிடித்தால் ஓரிரு வாரங்களில் தகுந்த மருந்துகள் மூலம் சரிசெய்து விடலாம்.

துரதிர்ஷ்டவசமாக ஆப்பரேசனால் சில சமயம் நிரந்தர ஊனம் ஏற்படவும் வாய்ப்பு உள்ளது. இத்தகைய நிரந்தர பாதிப்புகளை இரண்டு வகையாகப் பிரிக்கலாம்.

✎ **தவிர்க்க இயலாத பாதிப்புகள்:** இவை நோயின் வீரியத்தால் ஏற்படுவன. எத்தகைய சிறந்த மருத்துவராலும் கூட இத்தகைய பாதிப்புகளை தவிர்க்க இயலாது. உதாரணமாக முதுகில் நரம்பு கட்டி உள்ள குழந்தைகளுக்கு கால்கள் விளங்காமல் இருக்கும்; மலம், மூத்திரம் ஆகியவற்றை அடக்கும் திறனும் குறைவாக இருக்கும். வெளிநாட்டு மருத்துவ மனைகளுக்கு சென்றாலும், கோடிக் கணக்கில்

செலவழித்தாலும் கூட இந்த பாதிப்புகளை தவிர்க்க இயலாது. இவற்றை விட குழந்தையின் உயிர் முக்கியம் என்பதாலேயே இந்த பாதிப்புகள் வந்தாலும் பரவாயில்லை என மருத்துவர் அறுவை சிகிச்சை செய்யத் துணிகிறார். எனவே இத்தகைய பாதிப்புகள் ஏற்படும்போது மருத்துவரை குறை கூறுவதை விடுத்து சூழ்நிலையை உணர்ந்து மருத்துவருடன் ஒத்துழைப்பதே குழந்தையின் நலனுக்கு ஏற்றது; அதுவே விவேகமும் கூட!

✎ **தவிர்க்கக் கூடிய பாதிப்புகள்:-** இவை பயிற்சியற்ற போலி மருத்துவர்களால் ஏற்படக் கூடியவை ஆகும். தகுந்த பயிற்சி பெற்ற குழந்தை அறுவை சிகிச்சை சிறப்பு மருத்துவர்களிடம் ஆப்பரேசன் செய்து கொள்வதால் இவ்வகையான பாதிப்புகளை நிச்சயம் தவிர்த்துவிடலாம்.

10. எத்தகைய நோய்களுக்கு குழந்தை அறுவை சிகிச்சை நிபுணரை அணுகலாம்?

1. எல்லா உறுப்புகளிலும் வரக்கூடிய பிறவி ஊனம் (அல்லது) குறைபாடுகள்.
2. மஞ்சள் அல்லது பச்சை நிற வாந்தி
3. மருந்துகளால் குணமாகாத நாள் பட்ட வாந்தி
4. கட்டிகள்
5. வயிற்று வலி
6. வயிறு வீக்கம்;
7. தலை பெருத்து இருப்பது
8. விதை வீக்கம் / விதை இன்மை / விதை வலி (ஆண் குழந்தைகளுக்கு)
9. புண், தீக்காயம்
10. விபத்துகளில் அடிபடுதல்
11. மலச்சிக்கல்
12. சிறுநீர் கழிப்பதில் உபாதைகள்
13. மலம், சிறுநீர், வாந்தி ஆகியவற்றில் இரத்தம் கலந்து வருதல்

11. பிறவியிலேயே குழந்தைகளுக்கு ஊனம் ஏற்படக் காரணம் என்ன?

பிறவி ஊனம் ஏற்பட பல காரணங்கள் உள்ளன.

(அ) தாய், தந்தை, வழியாக வரும் பரம்பரை நோய்கள், ஊனங்கள்

தாய்வழி அல்லது தந்தைவழி உறவினர்கள் யாருக்கேனும் ஊனம் இருந்தால் அது குழந்தைக்கு வர வாய்ப்பு உள்ளது. இதை மரபு வழி நோய்கள் என்பர். தாய் தந்தை ஆகியோர் நல்ல உடல் ஆரோக்கியத்துடன் இருந்தாலும், இந்நோய்கள் அவர்கள் உடலில் மறைந்து இருந்து பிறக்கும் குழந்தையை தாக்கக்கூடும்.

(ஆ) கர்ப்பமுற்ற தாய்க்கு ஏற்படும் சத்து குறைவு:

கர்ப்ப காலத்தில் சத்தான உணவை சாப்பிடுவது முக்கியம். குறிப்பாக ஃபோலிக் அமிலச் சத்து (Folic Acid) இரும்பு சத்து (Iron) ஆகியவை முக்கியமானவை. நாம் உண்ணும் உணவில் இவை குறைந்த அளவே இருப்பதால் இந்த சத்து மாத்திரைகளை கர்ப்ப காலத்தில் மருத்துவரின் ஆலோசனைபடி சாப்பிடுவது முக்கியம். மூளை, நரம்புகள் நன்று உருவாக Folic Acid மிக இன்றியமையாதது ஆகும்.

(இ) கர்ப்ப காலத்தில் மருத்துவரின் ஆலோசனையின்றி மருந்துகளை உட்கொள்ளுதல்

நம் நாட்டில் பலர் தலைவலி, காய்ச்சல் என்றால் மருத்துவரிடம் போகாமல் மருந்து கடைகளில் ஏதோ ஒரு மருந்தை வாங்கி சாப்பிடுகின்றனர். இவ்வாறு கர்ப்ப காலத்தில் சாப்பிட்டால் குழந்தை ஊனம் அடைய வாய்ப்பு உள்ளது. நாட்டு மருந்து, ஊசி, மாத்திரைகள் என எதையும் மருத்துவர் அனுமதியின்றி எடுத்துக் கொள்ள கூடாது.

(ஈ) கர்ப்ப காலத்தில் தாய்க்கு ஏற்படக்கூடிய காய்ச்சல், காமாலை, அம்மை போன்ற நோய்களாலும் குழந்தைக்கு ஊனம் வரலாம்.

12. பிறவி ஊனத்தை எப்படி தவிர்க்கலாம்?

- நெருங்கிய சொந்தத்தில் (மாமா அல்லது அத்தை மகன்/மகள்) திருமணம் செய்வதை தவிர்ப்பது நல்லது
- கர்ப்பம் தரித்த உடன் சத்துள்ள உணவுகளை சாப்பிடுவது நலம். மருத்துவரின் ஆலோசனைபடி Folic Acid போன்ற சத்து மாத்திரைகளை சாப்பிட வேண்டியது அவசியம்.
- மருத்துவரின் ஆலோசனையின்றி எந்த ஒரு மருந்தையும் கர்ப்ப காலத்தில் (குறிப்பாக முதல் மூன்று மாதங்களில்) உட்கொள்ள கூடாது.
- திருமணத்திற்கு முன்பே அம்மை (Rubella) போன்ற நோய்கள் வராதவாறு தடுப்பு ஊசி போட்டுக் கொள்ளுதல் வேண்டும்.
- தகாத உடல் உறவு, மது, சிகரெட் போன்ற நாகரீக அவலங்களை கைவிட்டு பாரம்பரிய ஆசார நெறியில் வாழ்வது இன்றியமையாதது.
- கர்ப்பம் தரித்த 4வது மாதத்தில் கருவில் உள்ள குழந்தைக்கு ஊனம் ஏதேனும் உள்ளதா என ஸ்கேன் (Ultrasound scan) செய்து கொள்வது முக்கியம். தகுதி வாய்ந்த ஸ்கேன் நிபுணரை அணுகுவது அதை விட முக்கியம்.

13. கர்ப்ப காலத்தில் ஸ்கேன் செய்யும் போது குழந்தைக்கு ஊனம் இருப்பதாக தெரிந்தால் என்ன செய்யவேண்டும்?

குழந்தைகளுக்கு வரக்கூடிய ஊனங்களை இரண்டு வகையாகப் பிரிக்கலாம்.

ஆப்பரேசன் மூலம் சரி செய்யக் கூடிய ஊனங்கள்.

இத்தகைய ஊனம் இருந்தால் அதைப் பற்றி கவலைப் படாமல் கர்ப்பத்தை தொடரலாம். குழந்தை பிறந்த பின் ஆப்பரேசன் மூலம் ஊனத்தை சரிசெய்து கொள்ளலாம். இதற்கு மகப்பேறு மருத்துவர், குழந்தை அறுவை சிகிச்சை மருத்துவர் ஆகியோரை பிரசவத்திற்கு முன்பே கலந்து ஆலோசிக்க வேண்டும். "பிரசவம் எந்த மருத்துவமனையில் நடைபெற வேண்டும்.?", "சுகப்பிரசவமா? அல்லது சிசேரியனா? "போன்ற விஷயங்களை முன் கூட்டியே தீர்மானிக்க வேண்டியது அவசியம்.

சரி செய்ய இயலாத நிரந்தர ஊனம்

இத்தகைய ஊனங்களால் குழந்தைக்கு நிரந்தர உபாதைகள் நேரிடும். உதாரணமாக முதுகில் நரம்பு கட்டி (meningo myelocoele) இருந்தால் குழந்தை வாழ்நாள் முழுவதும் நடக்க முடியாமலும், மலஜலம் அடக்க முடியாமலும் சொல்லொண்ணா துன்பத்திற்கு ஆளாகும். எனவே இத்தகைய ஊனம் இருந்தால் குழந்தை அறுவை சிகிச்சை சிறப்பு மருத்துவரை கலந்து ஆலோசித்த பின் கரு கலைப்பு செய்து கொள்வது நல்லது. அடுத்த குழந்தை நலமுள்ளதாக பிறக்குமா என்று அறிந்து கொள்ள மரபியல் (genetic) சோதனைகள் செய்து கொள்ள வேண்டும்.

14. எத்தகைய பிறவி ஊனங்களை அறுவை சிகிச்சை மூலம் குணப்படுத்தலாம்?

இந்த கேள்விக்கான பதில் மிக நீண்டதாகும். இதை முழுதாக அறிந்து கொள்ளவே குழந்தை அறுவை சிகிச்சை சிறப்பு மருத்துவர் 12 வருடங்கள் பயிற்சி பெறுகிறார். எனவே ஓரிரு பக்கங்களில் இதை புரிய வைப்பது கடினமாகும். குறிப்பிட்ட ஒரு குழந்தைக்கு இருக்கும் ஊனம் சரிசெய்யக் கூடியதா இல்லையா என்பதை குழந்தை அறுவை சிகிச்சை நிபுணரிடம் கேட்டு தெரிந்து கொள்வதே எளிதானதாகும். எனினும் பொதுவாகக் கணப்படும் சில ஊனங்களைப் பற்றி கீழே விவரித்துள்ளோம்.

பெருந்தலை நோய் (hydrocephalus)

மூளையில் அளவுக்கு அதிகமான நீர் சேர்ந்து கொள்வதால் தலை பெருத்து காணப்படுகிறது. இதை விரைவாக சரிசெய்யாவிட்டால், மூளை வளர்ச்சியை பாதித்து விடும். மூளையில் சேரும் நீர் வயிற்றுக்குள் வடியுமாறு பிளாஸ்டிக் குழாய் ஒன்றை தோலுக்கு அடியில் வைத்து ஆப்பரேசன் செய்து இதை குணப்படுத்திவிட முடியும்.

உதடு / அண்ண பிளவு

உதடு பிளவை குழந்தை பிறந்த நான்காவது மாதத்திலும் அண்ண பிளவை பத்தாவது மாதத்திலும் ஆப்பரேசன் மூலம் சரிசெய்யலாம். அண்ண பிளவு வெளியில் தெரியாவிட்டாலும் அதை சரிசெய்வது முக்கியம். இல்லாவிட்டால் குழந்தைக்கு சரியான பேச்சு வராமல்

போகலாம்; அல்லது காதில் சீழ் வரலாம். இத்தகையை குழந்தைகளால் தாயின் மார்பிலிருந்து சப்பி பால் குடிக்க முடியாது. அவ்வாறு குடித்தால் அது மூக்கு வழியாக வெளியே வந்து விடும். எனவே தாய்பாலை ஒரு கிண்ணத்தில் கறந்து எடுத்து கரண்டி அல்லது பாலாடை மூலமாக சிறிது சிறிதாக குழந்தைக்கு ஊட்ட வேண்டும். இவ்வாறு பால் ஊட்டாவிட்டால் குழந்தை போதிய ஊட்டச்சத்து இன்றி இளைத்துவிடும். ஆப்பரேசன் செய்த பிறகு குழந்தையால் நன்கு சாப்பிடவும் பேசவும் முடியும்.

✎ குதிரைக் குளம்புக்கால் (CTEV)

கால் பாதங்கள் உள்நோக்கி வளைந்து குதிரைக் குளம்பைப் போல காட்சி தரும். அதை சரிசெய்யாவிட்டால் குழந்தை நொண்டி நொண்டி நடக்க வேண்டியிருக்கும். குழந்தை பிறந்தவுடன் முதல் 21 நாட்களுக்குள் மாவு கட்டு போட்டு பாதங்களை நிமிர்த்தலாம். இந்த முயற்சி தோல்வி அடைந்தால் அறுவை சிகிச்சை மூலம் சரிசெய்து விடலாம்.

✎ முதுகில் ஏற்படும் நரம்பு கட்டி (Meningo Myelocoele)

பிறவியிலேயே முதுகு எலும்பில் ஏற்படும் கோளாறால் தண்டு வட நரம்பு வெளியில் துருத்திக் கொண்டு கட்டியாக காணப்படும். தண்டு வடத்தில்தான் கால், இடுப்பு ஆகியவற்றிற்கான நரம்புகள் செல்கின்றன. எனவே தண்டுவடம் பாதித்து இருப்பதால் இந்நோய் உள்ள குழந்தைகளால் நடக்க முடியாது. கால்கள் உணர்வற்று இருப்பதால் புண்கள் ஏற்படும். மலஜலம் அடக்கும் நரம்புகளும் பாதித்து இருப்பதால் எந்நேரமும் மலமும், மூத்திரம் வெளிவந்தவாறு இருக்கும். ஆண்குழந்தைகளுக்கு பிற்காலத்தில் ஆண்மையின்மை ஏற்படவும் வாய்ப்பு உள்ளது. இதில் சோகம் என்னவென்றால், இந்த நரம்பு குறைபாடுகளை எந்த மருத்துவ முறையாலும் சரிசெய்ய இயலாது. இந்த கட்டி தானாக உடைத்துக் கொண்டால் குழந்தைகள் மூளைக் காய்ச்சலால் இறந்து போகலாம். இவ்வளவு பிரச்சனைகள் இருப்பதால், இந்த ஊனம் உள்ள குழந்தைகளுக்கான சிகிச்சை முறையை குழந்தை அறுவை சிகிச்சை சிறப்பு மருத்துவரிடம் நன்கு கலந்து ஆலோசித்து முடிவு செய்ய வேண்டும். இந்த ஊனம் கருவிலேயே ஸ்கேன் மூலம் கண்டுபிடிக்கப்பட்டு விட்டால் கருகலைப்பு செய்து கொள்வது சிறந்தது.

இதில் முக்கியமான விஷயம் என்னவென்றால் மெனிங்கோசீல் (Meningocoele) என்ற மற்றொரு வகை கட்டி பார்ப்பதற்கு மெனிங்கோ மயலோசீல் (Meningo myelocoele) போலவே இருக்கும். ஆனால் மேல் குறிப்பிட்ட எந்த வித பாதிப்பும் இருக்காது. இத்தகைய Meningocoele கட்டிகளை ஆரம்பித்திலேயே கண்டுபிடித்து முறையான அறுவை சிகிச்சை அளித்தால் பூரணமாக குணப்படுத்த முடியும். ஒரு குழந்தைக்கு முதுகில் உள்ள கட்டி மெனிங்கோசீலா (Meningocoele) அல்லது மெனிங்கோ மயலோசீலா (Meningo myelocoele) என அறிய குழந்தை அறுவை சிகிச்சை நிபுணரை அணுக்கலாம்.

தொப்புள் புடைப்பு (Exomphalos)

பிறந்த குழந்தையின் தொப்புள் புடைத்து வீக்கமாக காணப்படுவது மிகவும் அபாயகரமானது. தொப்புளில் உள்ள ஓட்டை வழியாக குடல் வெளியே வந்து கட்டி போல தோன்றுகிறது. இதை உடனடியாக ஆப்பரேசன் மூலம் சரிசெய்வது மிகமுக்கியம். இல்லாவிட்டால் குடலை மூடியுள்ள சவ்வு கிழிந்து குடல் வெளியே தள்ளி விடும். இதனால் குழந்தைக்கு ஆபத்து நேரிடலாம். அவ்வாறு குடல் வெளியே வந்துவிட்டால் ஒரு சுத்தமான பாலிதீன் பைக்குள் குடலை வைத்து உடனடியாக குழந்தையை அறுவை சிகிச்சை நிபுணரிடம் காட்டவேண்டும்.

மலத்துவாரம் இல்லாமை அல்லது சிறுத்து இருத்தல்

சில குழந்தைகளுக்கு பிறவிலேயே மலத்துவாரம் இல்லாமலோ அல்லது சிறுத்தோ இருக்கும். இக் குறை பாட்டில் இரண்டு வகை உள்ளன.

எளிதில் சரிசெய்யக்கூடிய வகை : இதை ஒரு சின்ன ஆப்பரேசன் மூலம் எளிதாக சரிசெய்து மலத்துவாரம் ஏற்படுத்திவிடலாம்.

கடின வகை : இதை ஓரே ஆப்பரேசன் மூலம் சரி செய்வது கடினம். குழந்தை பிறந்த உடன் வயிற்றில் துளையிட்டு அது வழியாக மலம் போகுமாறு ஆப்பரேசன் செய்ய வேண்டும். பின்னர் குழந்தை வளர்ந்து ஒரு வயது ஆன பிறகு மலத்துவாரம் ஏற்படுத்த வேண்டும். அதன் பின் மூன்றாவது ஆப்பரேசன் செய்து முதலில் வயிற்றில் போட்ட துளையை மூடவேண்டும். இத்தகைய குழந்தைகள், குழந்தை அறுவை சிகிச்சை நிபுணரின் நேரடிக் கண்காணிப்பில் இருக்க வேண்டியது மிக அவசியம்

15. குழந்தை வாந்தி எடுத்தால் கூடவா ஆப்பரேசன் செய்ய வேண்டும்?

குழந்தை எடுக்கும் வாந்தியின் நிறம் என்ன? எத்தனை நாளாக வாந்தி எடுக்கிறது? என்பதைப் பொருத்து ஆப்பரேசனை முடிவு செய்யவேண்டும். வாந்தி மஞ்சள் அல்லது பச்சை நிறமாக இருந்தால் அது குடல் அடைப்பினால் ஏற்படுவது ஆகும். இதனை மருந்துகளால் சரிசெய்ய இயலாது. உடனடியாக குழந்தை அறுவை சிகிச்சை நிபுணரிடம் காட்டி தேவைப்பட்டால் உடனடி ஆப்பரேசன் செய்து கொள்வது முக்கியம். இதை விடுத்து மந்திரிப்பது, கயிறு கட்டுவது என காலத்தைக் கடத்துவது முட்டாள்தனமாகும்.

16. குழந்தைகளுக்கு கட்டி வந்தால் என்ன செய்யலாம்?

குழந்தைகளுக்கு வரும் கட்டிகளில் சில புற்று நோயாலும், பல நுண்கிருமி தாக்கத்தாலும் வருகின்றன. புற்று நோய் கட்டிகளுக்கு உடனடியாக அறுவை சிகிச்சை செய்யாவிட்டால் அது உடல் முழுவதும் பரவி உயிருக்கு ஆபத்தாகிவிடும். இதில் கவனிக்க வேண்டியது என்னவென்றால் புற்று நோய் கட்டிகள் பெரும்பாலும் வலியோ அல்லது வேறு உபாதைகளோ இல்லாமல் இருப்பதுதான். பலர் புற்றுநோய் கட்டி என்றாலே மிகுந்த வலி இருக்கும் என்ற தவறான எண்ணத்துடன் உள்ளனர். எனவே வலியில்லாமல் இருக்கும் கட்டிகளை புற்று நோயாக இருக்காது என அலட்சியப்படுத்தி விடுவது வேதனையான விஷயம். ஆகவே எந்த கட்டியாக இருந்தாலும் குழந்தை அறுவை சிகிச்சை நிபுணரை உடனடியாக அணுகவேண்டும். இதை விடுத்து பாட்டி வைத்தியம், பச்சிலை கட்டு என்று நாள் கடத்துவது நல்லதல்ல.

17. குழந்தைகளுக்குக் கூடவா புற்று நோய் வரும்?

ஆம்! இறைவனின் கோர விளையாட்டுகளில் இதுவும் ஒன்று. பலர் புற்று நோய் முதியவர்களுக்கு மட்டுமே வரக் கூடிய நோய் என்று தவறாக எண்ணுகிறார்கள். உண்மையில் புற்று நோய் குழந்தைகளையும் தாக்க வல்லது. 15 நாட்களே ஆன குழந்தைகளுக்கு கூட புற்று நோய் வரலாம். அது ஏன் ஏற்படுகிறது என்பதற்கான காரணம் இன்னும் அறியப்படவில்லை.

18. குழந்தைகளுக்கு ஏற்படும் புற்றுநோயின் அறிகுறிகள் என்னென்ன?

- வயிறு, கழுத்து, தலை, அக்குள், இடுப்பு, கை கால்கள், புட்டம் ஆகிய இடங்களில் வலியோ வேறு உபாதைகளோ இல்லாத கட்டிகள் தோன்றுதல்
- சிறுநீர், மலம், சளி ஆகியவற்றில் இரத்தம் வெளிப்போதல்
- மருந்துகளால் கட்டுப்படாத மஞ்சள் காமாலை
- அதீத இரத்த சோகை
- குழந்தை சாப்பிடாமல் இளைத்துப் போதல்
- நாள்பட்ட காய்ச்சல் (10 நாட்களுக்கு மேற்பட்டது)
- இரத்தக் கொதிப்பு நோய்
- மூச்சு திணறுதல்
- ஒரு பக்க விதை பெருத்து தோன்றுதல்
- ஆண் குழந்தைகளுக்கு பெண்களைப்போல் மார்பகம் வளருதல்
- பெண் குழந்தைகள் 10 வயதுக்கு முன்பே பூப்பு அடைதல்

இவற்றில் ஏதேனும் ஒன்று இருந்தாலும் அது புற்று நோயின் அறிகுறியாக இருக்கலாம். காலம் தாமதிக்காமல் குழந்தை அறுவை சிகிச்சை நிபுணரை அணுகுங்கள்

19. குழந்தைகளுக்கு வயிறு வீங்கினால் என்ன செய்யலாம்? கிரைப் வாட்டர் கொடுக்கலாமா? மாந்தம் தட்டி எடுக்கலாமா?

குடல் அடைப்பு, வயிற்றில் கட்டிகள் உருவாதல் போன்றவற்றால் குழந்தைகளுக்கு வயிறு வீக்கம் ஏற்படுகிறது. இவற்றிற்கு பெரும்பாலும் அறுவை சிகிச்சையே சரியான நிவாரணமாகும். கிரைப் வாட்டர், மாந்தம் தட்டுவது போன்றவை நிலைமையை மோசமாக்குமே தவிர நோயை குணப்படுத்த எந்த விதத்திலும் உதவா!

குடல் அடைப்பு ஏற்பட்ட குழந்தைகள் மலம் போகாமலும் வாந்தி (பச்சை/மஞ்சள் நிறம்) எடுத்தவாறும் இருக்கும். உடனடியாக ஆப்பரேசன் மூலம் அடைப்பை சரிசெய்யாவிட்டால் மூச்சு திணறல், சிறுநீரகப் பழுது ஆகியவை ஏற்பட்டு குழந்தை உயிருக்கு அபாயம் நேரலாம்.

20. குழந்தைகளுக்கு வயிற்று வலி எதனால் வருகிறது?

குறுகிய கால வயிற்று வலி : ஓரிரு நாட்களுக்குள் ஏற்படும் கடுமையான வயிற்று வலிகள் இவ்வகையில் அடங்கும். இவை பெரும்பாலும் அப்பெண்டிக்ஸ் போன்ற வயிற்று உறுப்புகளில் சீழ் பிடிப்பதால் வருவன ஆகும். உடனடியாக அறுவை சிகிச்சை செய்து சீழ் பிடித்த உறுப்பை அகற்றாவிட்டால், சீழ் இரத்தத்தில் கலந்து உயிருக்கு ஆபத்தாகிவிடும்.

நாள்பட்ட வயிற்று வலி:- சில குழந்தைகளுக்கு மாதக்கணக்கில் விட்டுவிட்டு வயிற்று வலி ஏற்படும். வயிற்றுப்புண், பித்தப்பை அழற்சி, குடல் புழுக்கள், குடல்வால் அடைப்பு, சிறுநீரகக் கல் போன்ற பல காரணங்களால் இவை ஏற்படலாம். ஸ்கேன், எக்ஸ்-ரே, இரத்தம், மலம், சிறுநீர் பரிசோதனைகள் போன்றவற்றால் பல நோய்களைக் கண்டறியலாம். எல்லா பரிசோதனைகளும் செய்த பிறகும் எந்த காரணமும் தெளிவாகத் தெரியாவிட்டால், வயிற்று வலி என்பதே குழந்தையின் மன பிரமையாகக் கூட இருக்கலாம். உதாரணமாக பள்ளிக்கூடம் செல்ல விரும்பாத குழந்தைகள் வயிற்று வலி என்று காலை வேளைகளில் கலாட்டா செய்வதை காணாத பெற்றோர்களே இல்லை! ஆனால் மனப்பிரமை என்பதை எல்லா பரிசோதனைகளும் செய்த பிறகே முடிவு செய்ய வேண்டும். அதை விடுத்து எடுத்த எடுப்பிலேயே குழந்தை பொய்தான் சொல்கிறது என்று முடிவு செய்வது முட்டாள்தனமானது.

21. ஆண் குழந்தைகளுக்கு ஒரு பக்க விதை இல்லாமல் இருந்தால் என்ன செய்ய வேண்டும்?

ஆரோக்கியமான ஆண் குழந்தைகளுக்கு இரண்டு விதைகளும் விதைப்பைக்குள் இருக்க வேண்டும். பல குழந்தைகளுக்கு விதைப் பையில் இருந்தாலும் கூச்ச சுபாவத்தால் மேலேறிக் காணப்படும். இதனால் எந்த பாதிப்பும் இல்லை. அதே சமயத்தில் ஒரு சில குழந்தைகளுக்கு விதைகள் விதைப்பையில் இல்லாமல் வயிற்றுக்குள் இருக்கும். இதை அலட்சியப்படுத்தினால் வயிற்றுக்குள் உள்ள விதைகள்

அழுகி பயனற்று போகவும், பின் காலத்தில் புற்று நோயாக வயிற்றுக்குள் உள்ள விதைகள் அழுகி பயனற்று போகவும், பின் காலத்தில் புற்று நோயாக உருவெடுக்கவும் வாய்ப்பு உள்ளது. எனவே குழந்தை அறுவை சிகிச்சை சிறப்பு மருத்துவரின் ஆலோசனைப்படி குழந்தைக்கு ஒரு வயது ஆவதற்குள் அறுவை சிகிச்சை செய்து கொள்வது நல்லது.

22. குழந்தைகளுக்கு விதையில் வலி ஏற்பட்டால் என்ன செய்ய வேண்டும்?

இது மிகவும் சீரியசான விஷயம். விதைக் கொட்டைகள் முறுக்கேறி இரத்த ஓட்டம் இல்லாமல் இருப்பதாலேயே வலி ஏற்படுகிறது. வலி ஏற்பட்ட 6 மணி நேரத்திற்குள் அறுவை சிகிச்சை செய்யாவிட்டால் விதைக் கொட்டை அழுகி பயனற்றது ஆகிவிடும்.

23. குழந்தைகளுக்கு காயம்பட்டால் என்ன முதலுதவி செய்யலாம்?

விளையாடும் போது சிறு காயங்கள் ஏற்படுவது சகஜம் தான். காயத்தை உடனடியாக சோப்பு போட்டு நன்கு தண்ணீர் ஊற்றி கழுவ வேண்டும் தண்ணீர் பட்டால் சீழ்பிடிக்கும் என்பது தவறான கருத்தாகும். காயத்திலிருந்து இரத்தம் கொட்டுவது நிற்காவிட்டால் ஒரு சுத்தமான துணியை காயத்தின் மேல் வைத்து இறுக்கமாக கட்டி மருத்துவரிடம் அழைத்து செல்லவேண்டும். டெட்டனஸ் தடுப்பு ஊசி மருந்துகள் ஆகியவற்றை மருத்துவரின் ஆலோசனைப்படி எடுத்துக் கொள்ள வேண்டும்.

எக்காரணத்தை முன்னிட்டும் காபிதூள், சுண்ணாம்பு, சர்க்கரை, முகப்பவுடர் போன்றவற்றை காயத்தின் மேல் போடக்கூடாது.

24. தீக்காயம் ஏற்படாமல் குழந்தைகளை பாதுகாப்பது எப்படி?

நாம் ஒவ்வொருவரும் நரகத்திற்கு போக பயப்படுவதற்குக் காரணமே நம்மை அங்கு நெருப்பில் போட்டும், கொதிக்கும் எண்ணையில் வறுத்தும் துன்புறுத்துவார்கள் என்பது தான். எனவே தீக்காயம் என்பது நரக வேதனைக்குச் சமமானது. குழந்தைகளை அதிலிருந்து பாதுகாப்பது ஒவ்வொரு பெற்றோரின் தலையாய கடமையாகும். கீழ்க்கண்ட வழிமுறைகளை பின்பற்றினால் தீக்காயம் ஏற்படாமல் குழந்தைகளைக் காப்பாற்றலாம்.

1. விளக்கு, அடுப்பு போன்றவற்றை குழந்தையின் துணிக்கு அருகில் இல்லாமல் பார்த்துக்கொள்வது முக்கியம்.
2. சமைக்கும் போது குழந்தைகள் அடுப்பங்கரைக்குள் வராமல் தடுப்பு வைப்பது அவசியம்
3. சூடான ரசம், சாம்பார், காபி, டீ போன்றவற்றை குழந்தைகளின் கைகளுக்கு எட்டாத உயரத்தில் மேடைமேல் வைக்க வேண்டும்.
4. பாலியஸ்டர் நைலான் ஆடைகள் எளிதில் தீப்பிடித்துக் கொள்வதால் பருத்தி ஆடைகளையே குழந்தைகளுக்கு பயன்படுத்த வேண்டும்.
5. பட்டாசுகளை பெரியவர்களின் மேற்பார்வையின்றி கொளுத்த அனுமதிக்கக் கூடாது.
6. பட்டாசுகளை கையில் வைத்து வெடிக்கக் கூடாது.
7. புஸ்வாணம் கொளுத்தும்போது முகத்தை தூர வைத்துக்கொள்ள வேண்டும்
8. தீப்பெட்டி, விளக்கு ஆகியவற்றை விளையாடக் கொடுக்கக் கூடாது.
9. குழந்தைகளை வீட்டுக்குள் வைத்து கதவை வெளிப்புறமாக பூட்டிவிட்டு கடைவீதி அல்லது கோவிலுக்கு செல்வது மிக ஆபத்தானது.
10. ஐந்து வயதுக்கு உட்பட்ட குழந்தைகளை எந்நேரமும் பெரியவர்களின் கண்காணிப்பிலேயே வைத்திருக்க வேண்டும்
11. சூடான இஸ்திரி பெட்டி, தோசைக்கல், மோட்டார் பைகின் புகை போக்கி ஆகியவற்றை குழந்தைகள் தொடாதவாறு பாதுகாப்பாக இருக்க வேண்டும்.
12. தரையிலிருந்து நான்கடி உயரத்திற்கு குறைவாக மின்சார பிளக் பாயின்டுகளை அமைக்கக் கூடாது
13. கழிப்பறை கழுவும் ஆசிட், பினாயில், மண்ணெண்ணை, பெட்ரோல், ஆகியவற்றை குழந்தைகள் எடுக்காதவாறு அலமாரிக்குள் பூட்டி வைக்க வேண்டும்.
14. குளியலறையில் வெந்நீர் வைத்தால் உடனடியாக குளிக்கும் பதத்திற்கு விளாவி விட வேண்டும்
15. சமைக்காத போது காஸ் சிலிண்டரை குழந்தைகள் அணுகாதவாறு சமையலறைக் கதவுகளை பூட்டி விட வேண்டும்

25. தீக்காயம் பட்ட குழந்தைகளுக்கு என்ன முதலுதவி செய்யலாம்?

குழந்தையின் ஆடையில் தீப்பற்றினால் வாளியில் தண்ணீர் கொண்டுவந்து ஊற்றி தீயை அணைக்க வேண்டும். தீ பட்ட ஆடைகளை உடனடியாக அகற்ற வேண்டும். தீ பட்ட இடம் குளிரும் வரை நீரை ஊற்றிக் கொண்டே இருக்க வேண்டும். பின் ஒரு சுத்தமான வெள்ளை வேட்டித் துணியால் காயத்தை முட வேண்டும். கண்டிப்பாக வாழை இலையில் படுக்க வைக்கக்குடாது. இங்க், எண்ணை, மஞ்சள், விபூதி, போன்ற எந்த பொருளையும் காயத்தின் மேல் போடக்கூடாது. குழந்தை சுயநினைவுடன் இருந்து தாகம் என்று சொன்னால் சிறிதளவு உட்பிட்ட மோர் குடிக்கக் கொடுக்கலாம். தீப்பட்ட இடத்தில் இருக்கும் வளையல், மோதிரம் ஆகியவற்றை உருவி கழற்றக்கூடாது, அவற்றை உளி கொண்டு வெட்டி எடுக்க வேண்டும். எவ்வளவு சீக்கிரம் முடியுமோ அவ்வளவு சீக்கிரம் மருத்துவரை நாடுவது நல்லது.

26. குழந்தைகளுக்கு மலச்சிக்கல் வருவது ஏன்?

தினமும் மலம் கழிக்காமல் இரண்டு மூன்று நாட்களுக்கு ஒருமுறை மலம் கழித்தால் அதை மலச்சிக்கல் என்கிறோம். குழந்தைகளுக்கு ஏற்படும் மலச்சிக்கலை இரண்டு வகையாகப் பிரிக்கலாம்.

பிறவிக் கோளாறு:

இது மலக்குடலில் உள்ள நரம்புகள் பிறவிலேயே சரியாக உருவாகாததால் ஏற்படும் மலச்சிக்கல். இந்த நோய் உள்ள குழந்தைகள் பிறந்த முதல் நாளே மலம் போகாமல் வயிறு வீங்கி சிரமப்படும். மிகவும் சிக்கலான ஆப்பரேசன் செய்துதான் இதனை குணப்படுத்த முடியும். மருந்துகளால் இது குணமாகாது. சரியான சிகிச்சை அளிக்காவிட்டால் உடல் மெலிந்து குழந்தை உயிர் இழக்கவும் நேரிடலாம்.

பழக்கக் கோளாறு:

தவறான உணவு, தவறான குழந்தை வளர்ப்பு ஆகியவற்றால் மலச்சிக்கல் ஏற்படலாம். இதனை ஆரம்பத்திலேயே உணர்ந்து கொண்டால் சரியான பழக்க வழக்கங்களை உண்டாக்கியும் மருந்துகள் கொடுத்தும் குணப்படுத்தி விடலாம். கவனிக்காமல் பல நாள் விட்டுவிட்டால் அறுவை சிகிச்சை செய்துதான் குணப்படுத்த முடியும். இதில் முக்கியமானது என்னவென்றால் அறுவை சிகிச்சைக்குப் பிறகும் தவறான பழக்கங்கள் தொடர்ந்தால் மீண்டும் மலச்சிக்கல் வந்துவிடும்.

27. குழந்தைகளுக்கு மலச்சிக்கல் வராமல் இருக்க என்ன செய்யலாம்?

பிறந்த குழந்தைகளுக்குத் தாய்ப்பால் தவிர வேறு பால் தரக்கூடாது. தாய்ப்பால் சிறந்த மலம் இளக்கி, புட்டிப்பால் குடிக்கும் குழந்தைகளே பெரும்பாலும் மலச்சிக்கலால் அவதியுறுகின்றன.

ஒருவயது ஆன குழந்தைகளுக்கு காலைக் கடன் கழிக்க பயிற்சி தருவது முக்கியம். கீழ்க்கண்டவாறு பயிற்சி தருவது அவசியம்.

1. காலை எழுந்தவுடன் ஒரு டம்ளர் பால் அருந்தக் கொடுக்க வேண்டும்.
2. பின்னர் கால்களில் வைத்துக் கொண்டோ அல்லது பிளாஸ்டிக் ஸ்டுலில் உட்கார வைத்தோ "ஆய்" போகுமாறு குழந்தையை மீண்டும் மீண்டும் கேட்டுக்கொள்ள வேண்டும். - ஆனால் மிரட்டக் கூடாது.
3. எக்காரணம் கொண்டும் குழந்தை நின்றுகொண்டு மலம் கழிக்க அனுமதிக்கக் கூடாது.
4. குழந்தை சமர்த்தாக மலம் கழித்து விட்டால் அதை ஊக்கப்படுத்தும் வகையில் ஒரு சாக்கலேட்டை லஞ்சமாகத் தரலாம்.
5. தினமும் ஒரு குறிப்பிட்ட நேரத்தில் மலம் கழிக்க வைப்பது முக்கியம் ஒரு நாள் 6.00 மணிக்கு, மற்றொரு நாள் 7.00 மணிக்கு, மூன்றாம் நாள் 8.00 மணிக்கு என மலம் கழிக்க அனுமதித்தால் மலச்சிக்கல் நிச்சயம்.
6. குழந்தை மலம் போகாவிட்டால் கடுமையான சொற்களால் திட்டாமல் பக்குவமாக எடுத்துக் கூறுவது முக்கியம்.
7. கீரைகள், பழங்கள் ஆகியவற்றை தவறாமல் உணவில் சேர்க்க வேண்டும்.
8. பிஸ்கெட், பிரட் போன்றவற்றை மிக அதிகமாகத் தரக்கூடாது.

